**வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் - 2021**

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் நிலவும் வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை 25.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

01. **ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-**

- வைத்திய உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தை தகுதித் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதியில் 65 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- வட மாகாணத்தில் காணப்படும் வைத்திய உத்தியோகத்தர் வெற்றிடங்களின் அடிப்படையில் செயலாளர், சுகாதார அமைச்சு, வடக்கு மாகாணம் அவர்களினால் பணிக்கப்படும் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
- அரச வைத்திய உத்தியோகத்தர் சேவையில் கடமையாற்றி முறையாக ஓய்வு பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- வைத்திய உத்தியோகத்தர் சேவையில் தாமாகவே பதவியை விட்டு விலகிய (V.O.P) அல்லது ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெற்றவரல்லாதவராக இருத்தல் வேண்டும்.

02. **சம்பளம்:-**

நடைமுறையிலுள்ள சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பு:-

**ஆளணி வெற்றிட விபரம் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பனவற்றை www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.**

சி.திருவாகரன்.
செயலாளர்,
மாகாண பொதுச் சேவைஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
05.03.2021